செ.வெ.எண்: 11 நாள்: 04.12.2016

**இலுப்பூரில் விவசாயிகளுக்கு ரூ.14,78,000 மதிப்பில் கடன் உதவித் தொகைக்கான ஆணைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் உள்ள ஆர்968 இலுப்பூர் தொடக்க வேளாண்மைகூட்டுறவு கடன் சங்கம் லிட். சார்பில் விவசாயிகளுக்கு பயிர் மற்றும் விவசாய கடன் உதவித் தொகைக்கான ஆணைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (04.12.2016) வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு பயிர் மற்றும் விவசாய கடன் உதவிதொகைக்கான ஆணைகளை வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழக அரசு விவசாயிகளின் கஷ்டத்தை போக்கும் வகையில் கூட்டுறவுத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு கடன்களை வழங்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்திலுள்ள இலுப்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் லிட். சார்பில் விவசாயிகளுக்கு பயிர் மற்றும் விவசாய கடன் உதவித் தொகைக்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி இடையப்பட்டி ஆண்கள் சுய உதவிக்குழுவை சேர்ந்த 11 நபர்களுக்கு ரூ.3,24,000 மதிப்பில் பயிர் கடன் நிதியுதவி தொகைக்கான ஆணைகளும், குரும்பட்டி பழனி ஆண்டவர் ஆண்கள் கூட்டுப்பொறுப்புக் குழுவை சேர்ந்த 6 நபர்களுக்கு ரூ.1,44,000 மதிப்பில் கடன் நிதியுதவி தொகைக்கான ஆணைகளும், புங்கிணிப்பட்டி பூவை விநாயகர் ஆண்கள் கூட்டுப்பொறுப்புக் குழுவை சேர்ந்த 8 நபர்களுக்கு ரூ.2,04,000 மதிப்பில் கடன் நிதியுதவி தொகைக்கான ஆணைகளும், குரும்பட்டி மழையடிகருப்பர் ஆண்கள் கூட்டுப்பொறுப்புக் குழுவை சேர்ந்த 10 நபர்களுக்கு ரூ.2,54,000 மதிப்பில் கடன் நிதியுதவி தொகைக்கான ஆணைகளும், இருந்திராப்பட்டி முத்துமாரியம்மன் ஆண்கள் கூட்டுப்பொறுப்புக் குழுவை சேர்ந்த 6 நபர்களுக்கு ரூ.1,51,000 மதிப்பில் கடன் நிதியுதவி தொகைக்கான ஆணைகளும், 16 நபர்களுக்கு ரூ.4,01,000 மதிப்பில் தனிநபர் விவசாய கடன் உதவித்தொகைக்கான ஆணைகளும் என மொத்தம் ரூ.14,78,000 மதிப்பீட்டில் பயிர் மற்றும் விவசாயக் கடன் உதவித் தொகைகளுக்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து விவசாயிகளும் இதனை உரிய முறையில் பெற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் தலைவர் திரு.இரா.சின்னதம்பி, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.ராமசாமி, முன்னாள் இலுப்பூர் பேரூராட்சித் தலைவர் திரு.குருபாபு, வட்டாட்சியர் திரு.தமிழ்மணி, வீட்டு வசதி சங்கத் தலைவர் திரு.கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**